பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 02 2025 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. தில்லி சட்டப்பேரவை தேர்தலில் 59 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

2. ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதத்தை முற்றிலும் ஒடுக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. மருந்து உற்பத்திக்கான முனையமாக இந்தியாவை உருவாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் ஆவின் பால் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் அபிஷேக் சர்மாவும், பந்துவீச்சு பிரிவில் வருண் சக்ரவர்த்தியும் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் 59 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி, காங்கிரஸ், ஆம்ஆத்மி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 699 பேர் களத்தில் உள்ளனர்.

வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடந்து முடிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தில்லி சட்டப்பேரவை தேர்தலோடு தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 65 சதவீத வாக்குகளும், உத்தரபிரதேசத்தின் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 66 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படுகின்றன.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதத்தை முற்றிலும் ஒடுக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு சூழல் குறித்து இன்று இரண்டாவது நாளாக அதிகாரிகளுடன் ஆய்வு செய்து அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் காரணமாக, ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத செயல்கள் வெகுவாக குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஊடுருவல்களை முற்றிலுமாக தடுக்க பாதுகாப்புப் படைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

போதைப்பொருள் புழக்கத்தை ஒழிக்கவும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதன்மூலம் தீவிரவாதிகளுக்கு நிதியுதவி கிடைப்பது தடுக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள ஐ.நா பொதுச்சபையின் தலைவர் திரு. **Philemon Yang**-ஐ வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேசினார்.

ஐ.நா-வில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சர்வதேச விவகாரங்கள் குறித்தும், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

உயிரி எரிபொருள் பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும் உயிரி எரிபொருள் பயன்பாடு முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

பசுமை ஹைட்ரஜனுக்கும் மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

பிரதமரின் சூரிய மின்சக்தி இல்ல திட்டம், பயனாளிகளுக்கு மின்கட்டணமே இல்லாத நிலையை ஏற்படுத்தியிருப்பதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக தில்லியைச் சேர்ந்த பயனாளி ஒருவர் தெரிவித்த கருத்தையும் பகிர்ந்துள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம் மாதாந்திர மின்கட்டணம் 7 ஆயிரம் ரூபாயிலிருந்து பூஜ்யமாக தற்போது குறைந்துள்ளதாக அந்த பயனாளி தெரிவித்துள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மருந்து உற்பத்திக்கான முனையமாக இந்தியாவை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மருந்தியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

குறைந்த செலவில் தரமான மருந்துகளை உலகிற்கு வழங்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளாவில் புனித நீராடுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று மட்டும் 63 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புனித நீராடினர்.

இதுவரை 38 கோடியே 29 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மகாகும்பமேளாவை ஒட்டி, இரண்டாம் கட்ட கலாச்சார திருவிழா வரும் 7ஆம் தேதி தொடங்கி 10ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதில், பல்வேறு மாநிலங்களின் கலைஞர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

<<<<<>>>>>

தமிழகத்தில் ஆவின் பால் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் கூறியுள்ளார்.

ராமநாதபுரத்தில் புதிய ஆவின் பாலகம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தனியார் பால் விலையை விட ஆவின் பால் விலை குறைவாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தொடர் நடவடிக்கைகளை ஆவின் நிர்வாகம் மேற்கொண்டு வருவதாகவும் திரு. ராஜ கண்ணப்பன் கூறினார்.

<<<<<>>>>>

பெங்களூருவில் வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ள விமான கண்காட்சியில், சூரியகிரண் விமானப்படையின் சாகச நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

இதில் விமானப்படையின் தூதர்கள் என்றழைக்கப்படும் 14 விமானிகள் பங்கேற்கின்றனர்.

இவர்கள் நடத்தும் விமான சாகச நிகழ்ச்சியின் போது தேசியக் கொடியின் மூவர்ணங்களை புகையாக காட்சிப்படுத்தும் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

1996ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த சூர்யகிரண் படை, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் 700 முறை சாகச நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.

<<<<<>>>>>

குஜராத்தில் மூத்த குடிமக்கள் மத வழிபாட்டு தலங்களில் தரிசனம் மேற்கொள்வதற்காக உதவித்தொகை வழங்கப்படும் திட்டத்தின்கீழ் இதுவரை ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டத்திற்காக, ஆயிரத்து 128 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ், பேருந்து கட்டணத்தில் 50 சதவீதமும், தினசரிப் படியாக 50 ரூபாயும், தங்கும் இடத்திற்கான செலவினங்களுக்காக தலா 5 ரூபாயும் வழங்கப்படுவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டினை இன்று கொல்கத்தாவில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 19 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அதில் 12 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் செல்வி மம்தா பானர்ஜி கூறினார். 40 நாடுகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டினை ஒழுங்குபடுத்துவதன் அவசியத்தை இந்த தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச உச்சிமாநாடு வலியுறுத்தியுள்ளது. துபாயில் நடைபெற்று வரும் இதற்கான உச்சிமாநாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிபுணர்கள் இக்கோரிக்கையை வலியுறுத்தினர். இந்தியாவின் சார்பில் 25 நிறுவனங்கள் இதில் கலந்து கொண்டுள்ளன.

<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட் குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேசுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பாகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

டிவென்டி – டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா 38 இடங்கள் முன்னேறி, 2வது இடத்தை பிடித்துள்ளார். மூன்றாவது இடத்தில் திலக் வர்மாவும், ஐந்தாவது இடத்தில் சூர்யகுமார் யாதவ்-ம் உள்ளனர்.

பந்துவீச்சுப் பிரிவில் வருண் சக்ரவர்த்தி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - **Saketh Myneni** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-1 என்ற செட்கணக்கில் பெல்ஜியத்தின் **Kimmer Coppejans -** துருக்கியின் **Ergi Kirkin** இணையை வென்றது.

<<<<<>>>>>

ஐஸ்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பாரா நீச்சல் போட்டியில் இந்தியாவின் **Mohammad Shams Aalam Shaikh** தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<END>>>>>